IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**OS.No.208/2020**

**நாள்– 21.08.2023**

சாகுல்ஹமீது

**வா.சா.2** சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி நவாஸ்கான் கூறிதான் நான் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். இன்று நீதிமன்றத்திற்கு வாதி தான் என்னை அழைத்து வந்தார். நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன். அதற்கு உரிமம் எதுவும் பெறவில்லை. ரியல் எஸ்டேட் தொழில் செய்வதற்கு எனக்கு தனியாக அலுவலகம் கிடையாது. நான் புரோக்கராக இருந்து இடத்தை வாங்கி விற்றுக் கொடுத்துக் கொண்டிருக்கிறேன். வாதியை முதன் முதலில் 2019 ல் இந்த இடம் முடிப்பது சம்பந்தமாக பார்த்தேன். வாதி என்ன தொழில் செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. செங்கோட்டையில் 3 சென்ட்டில் காலிமனையும் வீட்டிற்கும் கிரையம் செய்து கொடுப்பதற்கு கிரைய ஒப்பந்தத்தில் நான் சாட்சி கையொப்பமிட்டிருக்கிறேன். கிரைய ஒப்பந்தம் வீட்டிற்கு தான் போடப்பட்டது. கிரைய ஒப்பந்தத்தை நான் படித்து பார்த்தேன். கிரைய ஒப்பந்தத்தில் காலிமனை என்றுதான் காண்பிக்கப்பட்டிருக்கிறது. எனவே வீட்டிற்கு கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது என்று கூறியிருப்பது பொய் என்றால் வீட்டிற்கும் சேர்ந்து தான் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது. கிரைய ஒப்பந்த சொத்தினை நான் சென்று பார்த்தேன். அரை சென்ட் காலிமனையும் மீதி 2 1/2 சென்ட்டில் வீடும் உள்ளது. அதில் பழைய வீடும் உள்ளது. இப்போது புதுப்பித்துள்ளார். அந்த வீட்டிற்கு முன்பாக ஒரு கடையும் கட்டப்பட்டிருக்கிறது. கடை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று எனக்கு தெரியாது. கடை புதிதாக கட்டப்பட்டிருக்கிறது. நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு நான் தான் விவரங்கள் கூறினேன். எந்த தேதியில் ரூ.12,00,000/– வாதி

கொடுத்தார் என்று தேதி ஞாபகம் இல்லை. கிரைய ஒப்பந்த தேதியில் கொடுத்தார். பத்திரம் பதிவு செய்தபின்பு பதிவு அலுவலகத்தில் வைத்து ரூ.12,00,000/-ஐ வாதி கொடுத்தார். எந்த நேரத்தில் கொடுத்தார் என்று ஞாபகம் இல்லை. பத்திர எழுத்தர் அலுவலகத்தில் வைத்து வாதி பணத்தை கொடுத்தார். பையில் பணத்தை வாதி கொண்டுவந்திருந்தார். 16, 500 ரூபாய் கட்டுகளாக கொண்டுவந்தார். பணம் கொடுக்கும் போது வாதியும் மற்றொரு சாகுல்ஹமீதும் இருந்தார். வேறு யாரும் இல்லை. நானும் வாதியும் தேன்பொத்தை கிராமத்தில் வசித்து வருகிறோம். நானும் வாதியும் மற்றோரு சாகுல்ஹமீதும் கூட்டாக இருந்திருந்தோம் என்றும் நான் கூறியவாறு வாதி ரூ.12,00,000/- கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் கூறிய கிரைய ஒப்பந்தம் கிரையத்திற்காக எழுதி கொடுக்கவில்லை என்றும் கடனுக்கு ஆதரவாக எழுதி கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. வாதிக்காக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**OS.No.** 208/2020

| | | |
|---|---|---|
| Name | : | கே.சாகுல்ஹமீது **Pw3** |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 21st day of August 2023.

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கில் வாதி தரப்பில் 3 வது சாட்சி ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை.

**2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் புரோக்கர் தொழில் செய்து வருகிறேன். வாதி நவாஸ்கான் கூறிதான் நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்திருக்கிறேன். வாதி என்னுடைய பக்கத்து வீட்டுக்காரர் ஆவார். வாதி என்னுடைய உறவினர் ஆவார். நான் சாட்சி கையெழுத்திட்டதாக கூறும் கிரைய ஒப்பந்தம் சொத்தை நான் தான் வாதிக்கு முடித்து கொடுத்தேன். அந்த சொத்து விவரம் எனக்கு தெரியும். இந்த சொத்து மேலச்செங்கோட்டையில் உள்ளது. தெரு பெயர் தெரியாது. வீடும் காலிமனையும் ஆகும். மொத்தம் 3 சென்ட் ஆகும். அதில் வீடு எத்தனை சென்ட் உள்ளது காலி

மனை எத்தனை செண்ட்டில் உள்ளது என்று எனக்கு தெரியாது. வீடு மேற்கே பார்த்ததாகும். செண்டிறங் வீடாகும். 2 அறைகள், 1 கிச்சன் மட்டுமே உள்ளது. நான் பார்க்கும்போது புது கட்டிடமாக இருந்தது. நான் சாட்சி கையெழுத்திட்டதாக கூறும் கிரைய ஒப்பந்தத்தின் சொத்து விவரத்தில் வீடு இருப்பதாக தான் கூறி எழுதப்பட்டது. வீட்டை சேர்த்து தான் கிரைய ஒப்பந்தம் போடப்பட்டது. பத்திரம் எழுதும் போது வாதி ரூ.12,00,000/- கொடுத்தார். தேதி ஞாபகம் இல்லை. செங்கோட்டையில் பத்திர எழுதும் அலுவலகத்திற்கு சென்றிருக்கிறேன். சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து தான் பணம் கொடுக்கப்பட்டது. நான் வாதி மற்றும் வா.சா.2 ஆகியோர்கள் ஒரே ஊர்காரர்கள் என்றும் உறவுக்காரர்கள் என்றும் அதனால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கூறுவது போல கிரைய ஒப்பந்தம் கிரையத்திற்காக எழுதி கொடுக்கவில்லை என்றும் வாதியிடம் பிரதிவாதி ரூ.10,00,000/- கடன் வாங்கியதற்கு ஆதரவாக எழுதி கொடுக்கப்பட்டிருக்கிறது என்றால் சரியல்ல. சார் பதிவாளர் முன்னிலையில் பணம் கொடுக்கப்பட்டது. நான் பிரதிவாதி வாதி மற்றும் வா.சா.2 ஆகியோர்கள் இருந்தோம். வாதி பையில் பணத்தை கொண்டுவந்திருந்தார். 1ம் பிரதிவாதி எதில் பணத்தை கொண்டு சென்றார் என்று எனக்குதெரியாது. வாதிக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.